<u>அருப்புக்கோட்டை நகராட்சி</u>

**விகாரி ஆண்டு ஆவணி மாதம் நாள் : 30.08.2019 வெள்ளிக் கிழமை மாலை 4.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :– திரு.S.புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை., தனி அலுவலர்**

**பொருள் 1 :** நகராட்சி ஆணையாளரின் ஆகஸ்ட் – 2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்

**<u>அலுவலககுறிப்பு:</u>**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.759</u>**

**பொருள் 2 :** நகராட்சி பொறியாளரின் ஆகஸ்ட் – 2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்

**<u>அலுவலககுறிப்பு:</u>**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.760</u>**

**பொருள் 3 :** இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு வாகன எண் : TN 67 B 8965 குடிநீர் டேங்கர் மினிலாரி தகுதிச்சான்று 27.09.2019 அன்றுடன் முடிவடைகிறது எனவே மேற்படி வாகனத்தில் உள்ள பழுதுபணிகள் பார்ப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.20,000/–யை குடிநீர் நிதியின் கீழ்மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 5481/2019/இ2

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.761</u>**

**பொருள் 4 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு ஜி, பிளாக் 16, நகரளவு எண் 10/2(ப), 10/3, 11/1, 11/2 ல் 2.94 ஏக்கர் (11912.07 சமீ) பரப்பளவில் அமைந்திருந்த அனுமதியற்ற மனைப்பிரிவை அரசாணை எண் 78,172 H & UD நாள் 04.05.2017 மற்றும் 13.10.2017ன்படி வரன்முறைப்படுத்த கோரி திரு.காஜாநஜ்முதீன் என்பவர் விண்ணப்பித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களால் ம.வ.(மு)/ந.ஊ.து.இ(மம) எண் 255/2019 நாள் 04.05.2019ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழஙகப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பூஙகா மற்றும் சாலை இடத்தினை ஆவண எண் 3560/2019 நாள் 24.07.2019 மனுதாரரால் நகராட்சிக்கு தானமாக வழஙகப்பட்டுள்ளது. மேற்படி பூஙகா மற்றும் சாலை இடத்தினை நகராட்சி ஏற்று அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யலாம்.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.72/2019/எப்1

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.762</u>**

**பொருள் 5** : அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான காரியம் தனுஷ்கோடி தெரு கடை எண் 2 திரு.வீரக்குமார் என்பவருக்கு மாதவாடகை ரூ.1886/—க்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. மேற்படி கடைக்கு வாடகை நிலுவை ஏப்ரல் 2018 முதல் மார்ச் 2019 வரை ரூ26700/— (சேவை வரி உட்பட) செலுத்தாத காரணத்தினால் 07.06.2019 அன்று கடை பூட்டி சீல் வைக்கப்பட்டது. மேற்படி கடை பூட்டி சீல் வைக்கப்பட்ட பின்னரும் தொடர்ந்து நிலுவை தொகை செலுத்தப்படவில்லை. மேற்படி கடைக்கு குத்தகைதாரர் திரு.வீரகுமார் பெயரில் ரூ.50000/— வைப்புத்தொகை உள்ளது. எனவே மேற்படி கடைக்கான வாடகை நிலுவை தொகை (ஏப்ரல் 2018 முதல் ஆகஸ்ட் 2019 வரை) ரூ37825/—ஐ(சேவைவரி உட்பட) வைப்புத்தொகையில் ஈடு செய்யவும், மேற்படி கடையின் உரிமத்தை ரத்து செய்து கடையை பொது ஏலத்தல் விடவும், மீதமுள்ள வைப்புத்தொகையை பறிமுதல் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழஙகலாம் — ந.க.எண்.244/2019/அ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.763**

**பொருள் 6 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு A, பிளாக் 12, நகரளவு எண் 10/7 சர்வே எண் 55/2 பகுதியில் 1.155 ஏக்கர் 4840 சமீ பரப்பளவில் அமைந்திருந்த அனுமதியற்ற மனைப்பிரிவை அரசாணை எண் 78,172 H & UD நாள் 04.05.2017 மற்றும் 13.10.2017ன்படி வரன்முறைப்படுத்த கோரி திரு.P.சரவணக்குமார் என்பவர் விண்ணப்பித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களால் ம.வ.(மு)/ந.ஊ.து.இ(மம) எண் 434/2019 நாள் 19.07.2019ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பூஙகா மற்றும் சாலை இடத்தினை ஆவண எண் 3929/2019 நாள் 20.08.2019 மனுதாரரால் நகராட்சிக்கு தானமாக வழஙகப்பட்டுள்ளது. மேற்படி பூஙகா மற்றும் சாலை இடத்தினை நகராட்சி ஏற்று அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யலாம்.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். — ந.க.எண்.5219/2019/எப்1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.764**

**பொருள் 7 :** கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவன இயக்குநர் கடிதம் ந.க.எண்.648/2019/அ2, நாள் 30.07.2019ன் படி 2019—2020 ஆம் ஆண்டிற்கு அருப்புக்கோட்டை நகராட்சியால் செலுத்தப்பட வேண்டிய பஙகளிப்பு தொகை ரூ.50,000/—ஐ செலுத்த கோரப்பட்டுள்ளது. மேற்படி பஙகளிப்பு தொகையானது தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தின் கட்டிட மேம்பாட்டிற்காகவும் மற்றும் பராமரிப்பிற்காகவும் ஆண்டுதோறும் நகராட்சிகளால் பஙகளிப்பு தொகை செலுத்தப்பட்டு வருகிறது. எனவே, மேற்படி காரணஙகளுக்காக அருப்புக்கோட்டை நகராட்சியில் 2019 – 2020ம் ஆண்டிற்கு செலுத்தபட வேண்டிய பஙகளிப்புத்தொகை ரூ.50,000/—ல் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். — ந.க.எண். 5350/2019/சி1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.765**

**பொருள் 8 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள குடிநீர் வாகன எண். TN 67 B 8965 வாகனத்தின் Engine பழுது ஆகி வாகனம் இயக்க முடியாத நிலையில் உள்ளது.அரசாணை எண். 983 Home (Transfort-IV) நாள்:03.08.2004ல் கனரக வாகனஙகளுக்கு 10 வருடஙகளுக்கு மேலான வாகனஙகளுக்கு பழுது பணிகள் பார்க்க ரூ.15000/–வரை அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதினை சரிசெய்வதற்கான செலவீன தொகை ரூ.1,24,900/– ஆகும். மேற்படி வாகனமானது நகரின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் மெயின் குழாய் பைப் லைன் இல்லாத இடஙகளில் உள்ள மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்து வருவதால் தேய்மானம் அதிகமாக உள்ளது. எனவே அரசு நிர்ணயிக்கப்பட்ட தொகையினை விட கூடுதலாக பராமரிப்பு செலவினஙகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே இந்த கூடுதல் செலவீனத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் உரிய பின்னேற்பு பெறுவதற்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 3590/2019/இ2

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.766</u>**

**பொருள் 9 :** விருதநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.A7/1/8050/2019 நாள் 05.07.2019 ன்படி விருதுநகர் மாவட்டத்தில் பணிபுரியும் தினக்கூலி பணியாளர்களுக்கு 2018–2019ல் வழஙகப்பட்ட தினக்கூலியில் 3 சதவீதம் உயர்த்தி 2019–2020ல் வழஙகிட உத்தரவிடப்பட்டுள்ளதன் அடிப்படையில் அருப்புக்கோட்டை நகராட்சியில் பணிபுரிந்துவரும் DBC பணியாளர்களுக்கு ஜீன் – 2019 முதல் டிசம்பர்–2019 வரையிலான 7 மாதஙகளுக்கு (214 நாட்கள் x 80 நபர்கள் x தினக்கூலி ரூ.214/–வீதம்) உத்தேச செலவுத்தொகை ரூ.36,63,680/– செலவாகும் மேற்படி உத்தேச செலவுத்தொகை ரூ.36,63,680/– வரை செலவு செய்யவும் DBC பணியாளர்களுக்கு மன்றபொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 8009/2013/எச்1

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.767</u>**

தனி அலுவலர்

அருப்புக்கோட்டை நகராட்சி